**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்- கல்வி- சுயநிதிக் கல்லுரிகளில் அரசு ஒதுக்கீடு இலவச இடத்தில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ ஆதிதிராவிட மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை-பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.50,920/-க்குள் உள்ளவர்களுக்கு அரசு/அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் விதிக்கப்படும் கல்விக் கட்டண அளவிற்கு வழங்குதல்-ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை**

அரசாணை(நிலை)எண். 26,
நாள் 30.3.2000

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.722, சமூக நலத்துறை, நாள் 13.10.77,
2) ஆதிதிராவிடர் & பழங்குடியுனர் நல இயக்குநரின் கடிதம் எண்,அய்1/56877/94. நாள் 22,9,98. 26.3.99 மற்றும் 17.9.99,

---

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசு ஆணையில் பள்ளி இறுதி வகுப்பிற்கு மேற்பட்ட கல்வி பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ ஆதிதிராவிட மாணவ. மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோர்/ பாதுகாவலர் வருமான வரம்பின்றி கல்விக் கட்டணச் சலுகை அளித்து ஆணையிடப்பட்டது. இவ்வாணையின் மூலம் அளிக்கப்பட்ட கல்விக் கட்டணச் சலுகை அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்/கிருத்துவ ஆதிதிராவிட மாணவ. மாணவியர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டு வருகிறது. சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் பட்டம், பட்ட மேற்படிப்பு தொழிற்கல்வியில் பட்டம். பட்ட மேற்படிப்பு மற்றும் இதர போஸ்ட்மெட்ரிக் கல்வி பயிலும் ஆதிதிராவிட/பழங்குடியின மாணவ ,மாணவியர்களுக்கு மேலே படிக்கப்பட்ட அரசு ஆணையின் மூலம் அளிக்கப்பட்ட கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்படவில்லை.

2, எனவே, பல்வேறு தொண்டு நிறுவனங்களிடமிருந்தும், சமூக அமைப்புகளிடமிருந்தும், பல்கலைக் கழகங்களிடமிரைந்தும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர் அமைப்புகளிடமிருந்தும் சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கும்

கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என அரசுக்கு கோரிக்கைகள் வந்தன. இது தொடர்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரும் மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசி.ற்கு சில பரிந்துரைகளை அனுப்பியுள்ளார்.

3. மேலே பத்தி 2லுள்ள கோரிக்கைகளை அரசு தீர பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் சுயநிதிக் கல்லூரிகளில். இலவச இடங்களில் (Free seats) பயிலும் ஆதிதிராவிடர் /பழங்குடியினர்/கிருத்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுள், அவர்களது பெற்றோர்/ பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,920/-க்குள் உள்ளவர்களுக்கு நடப்பு ஆண்டிலிருந்து (1999-2000) மேலே வ.எண்.1ல் படிக்கப்பட்ட அரசு ஆணையில் உள்ள கல்விக் கட்டண சலுகை வழங்கலாம் எனவும், இந்த கட்டணச் சலுகை அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கு விதிக்கப்படும் கல்விக் கட்டண அளவுக்கு இருக்கும் எனவும் முடிவு செய்தது.

4) அவ்வாறே நடப்பு ஆண்டிலிருந்து (1999-2000) சுயநிதிக் கல்லூரிகளில் இலவச இடங்களில் ( Free Seats) பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் /கிருத்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுள் அவர்களது பெற்றோர்/ பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,920/-க்குள் உள்ளவர்களுக்கு மேலே பத்தி 3ல் உள்ளவாறு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கு விதிக்கப்படும் கல்விக் கட்டண அளவுக்கு கல்விக் கட்டணச் சலுகை அளித்து அரசு ஆணையிடுகிறது.

5) மேலே பத்தி 4ல் அளிக்கப்பட்ட சலுகையின் மூலம் ஏற்படும் செலவினம் புதிய திட்டப் பணியாகக் கருதப்படும். இதற்காக சட்டப்பேரவையின் ஒப்புதல் நாடடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரை இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினை சில்லரைச் செலவின நிதியிலிருந்து முன்பணமாகப் பெற்றுச் செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வ,செ.1)த் துறையில் வெளியிடப்படும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் இது குறித்துத் தக்க செயற்குறிப்புகளை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இரண்டு நகல்களை நிதித்துறைக்கு அனுப்பி விட்டு இத்துறைக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்.

6) இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.கு,எண்.218/சி..செ( கி.வை) /2000, நாள் 24.3.2000ல் வழங்கப் பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு.சம்பத்குமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை.5.
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை.6/தொழிற்கல்வி இயக்குநர், சென்னை-25.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை-10/சட்டக்கல்வி இயக்குநர், சென்னை-101.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை.
பதிவாளர், டாக்டர் எம்.ஜி.ஆர்,பல்கலைக்கழகம், சென்னை.
பதிவாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,, சிதம்பரம்.
பதிவாளர், இதர அனைத்துப் பல்கலைக் கழகங்கள்.
மாநிலக் கணக்காயர்,சென்னை.18/6 /35 மற்றும் (பெயரில்)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/அனைத்து மாவட்ட ஆதி&பந அலுவலர்கள்

அனைத்து கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை (கிழக்கு/தெற்கு/வடக்கு),
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை/ கோயம்புத்தூர்.
உதவி சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.

நகல்:

நிதித்துறை(சந/வசெ1, 2, 3), சென்னை-9.
உயர்கல்வித்துறை/மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை/
வேளாண்மைத்துறை/சட்டத்துறை, சென்னை,9
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர்.சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை.9